**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 21/2016**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 23.02.2026 | | |
| பெயர்: | தீபிகா (PW–2 Chief & cross) | கணவர் பெயர்: | வினோத்குமார் |
| கிராமம்: | மணிகிராமம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | VAO, சீர்காழி | வயது : | 30/2026 |

**<u>முதல் விசாரணை : 23.02.2026</u>**

நான் தற்போது சீர்காழி தாலுக்கா, நத்தம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியமளிக்கிறேன். நான் அழைப்பாணையில் கூறியுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். நத்தம் கிராமத்தின் புல எண்.117A/20A சின்னதுரை, கலியமூர்த்தி ஆகியோர் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது. அதன் மொத்த விஸ்தீரணம் 756 ச.மீ. புல எண்.117A/20A விற்கான சிட்டா அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. அந்த சிட்டா **சா.சா.1** ஆகும். புல எண். 117A/20A விற்கான தூய அடங்கல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. அந்த அடங்கல் **சா.சா.2** ஆகும்.

புல எண்.117A/21A ஆனது செல்வராஜ் செட்டியார் மக்கள் ஜெயராமன், சுரேஷ் ஆகியோர் பெயரில் உள்ளது. புல எண். 117A/21A ஆனது சா.சா.1 ல் உள்ளது. அ பதிவேட்டில் உரிமைதாரரின் பெயர் இல்லை என்பதற்கான காரணம் அனைத்துமே அரசின் பெயரில் இருந்தது, பின்னர் உட்பிரிவுகள் செய்யப்பட்டு,

சிட்டா, அடங்கல் பதிவு செய்யப்பட்டது. அந்த அ பதிவேட்டின் அசலுடன் ஒத்துப் பார்க்கப்பட்ட நகல் **சா.சா.3** ஆகும். தாவா சொத்திற்கான புல எண்.117A க்கான புல வரைபடம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **சா.சா.4** ஆகும். சா.சா.4 ஆவணத்தில் புல எண். 117A/20A க்கு தென்புறமாக சுரேஷ், ஜெயராமன் ஆகியோர்களின் இடம் காட்டப்பட்டுள்ளது.

புல எண்.117Aற்கு கிழக்கு புற எல்லையாக சீர்காழி–மயிலாடுதுறை மெயின்ரோடு உள்ளது. புல எண். 117A/20A ற்கு வடபுறத்தில் விஜயலெட்சுமி மற்றும் நடராஜன் ஆகியோரின் இடம் உள்ளது. புல எண். 117A/20A, புல எண். 117A/21A இவற்றின் மேற்புறம் மேலத்தெரு உள்ளது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**(ஆரம்பித்த நேரம்– 12.43)**

1. சா.சா.3 ஆவணத்திலிருந்து பிரிக்கப்பட்டது தான் சர்வே எண்.117A–1 ஆகும். சா.சா.3 ஆனது தனிப்பட்ட யார் பெயரையும் குறிப்பிடாமல் சாலை ஓரம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.2 ல் 20A என்ற உட்பிரிவிற்கு நேராக 802 என எழுதப்பட்டு 756 என திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. சா.சா.2 ல் 20A என்ற உட்பிரிவிற்கு பட்டா எண். 322 என கொடுக்கப்பட்டு, கலியமூர்த்தி, சின்னதுரை பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.1லும் 20A என்ற உட்பிரிவிற்கு நேராக 802 என எழுதப்பட்டு 756 என திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.3ல் 20A என்ற உட்பிரிவு இல்லை என்றால் அது பழைய பதிவேடு என்பதால் இருக்காது.

3. சா.சா.3 ஆவணத்தை வைத்து கலியமூர்த்தியோ, சின்னதுரையோ உரிமையாளர் என கூற இயலாது என்றால் சரிதான். எனது சாட்சிய சம்மனில் தாவா சொத்தின் விஸ்தீர்ணம் கூறவில்லை என்றால் சரிதான். சா.சா.3 யைத் தவிர மற்ற ஆவணங்களின் படி 117A/20Aன் மொத்த விஸ்தீரணம் 756 ச.மீ. என்றால் சரிதான்.

4. சா.சா.1 முதல் சா.சா.4 வரையிலான ஆவணங்களின்படி நான்கெல்லையை நிர்ணயம் செய்ய முடியாது என்றால் சரிதான். எனது சாட்சிய சம்மனில் தாவா சொத்தின் விஸ்தீரணமோ, நான்கெல்லையோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விஸ்தீரணமோ, நான்கெல்லையோ குறிப்பிடாதபோது, புல எண்.117A/20A குறித்து நான் சாட்சியமளிக்க இயலாது என்றால் சரியல்ல.

5. சா.சா.1 முதல் சா.சா.4 வரையிலான ஆவணங்கள் கோப்புகளின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். கள ஆய்வு செய்து வழங்கப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் 117A/20ஐ பொறுத்தது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்–13.04)**